## 4.1 கிராம ஊராட்சிக் குழுக்களை அமைப்பது மற்றும் அக்குழுக்களுக்கு அலுவல்களை ஒப்படைத்தல்

ஊரக வளர்ச்சி துறை

அரசாணை (நிலை) எண்.168 நாள் : 23.8.1999

### 1. குறுத்தலைப்பு

இந்த விதிகள் தமிழ்நாடு ஊராட்சிகள் (கிராம ஊராட்சிகள் குழுக்களை அமைப்பது மற்றும் அக்குழுக்களிடம் அலுவல்களை ஒப்படைத்தல்) விதிகள் 1999 என்று அழைக்கப்படும்.

### 2. பொருள் விளக்கம்

இவ்விதிகளில் சந்தர்ப்பத்திற்கேற்ப வேறு பொருள் குறித்தாலன்றி மற்றபடி 'சட்டம்' எனப்படுவது, 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 21/1994) எனப் பொருள்படும்.

### 3. குழுக்கள் அமைப்பது

ஒவ்வொரு கிராம ஊராட்சியும் கீழ் குறிப்பிட்டுள்ள குழுக்களை அமைக்கலாம் அவைகளாவன :

(i) நியமனக் குழு

(ii) நலக் குழு

(iii) நல்வாழ்வு, தண்ணீர் மறறும் சுகாதாரக் குழு

(iv) பொது முறைக் குழு

(v) வேளாண்மைக் குழு

(vi) பணிகள் குழு

(vii) கல்விக் குழு

**(2)** சம்பந்தப்பட்ட கிரா ஊராட்சிகள் ஒவ்வொரு குழுவுக்குமான உறுப்பினர்களைத் தேர்வு செய்யும். ஒவ்வொரு குழுவும் ஐந்துக்கு மிகாத உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும். மொத்த உறுப்பினர்கள் ஐந்துக்கு மிகாமலும், அதில் இரண்டு பேருக்கு மிகாமல் கிராம ஊராட்சி உறுப்பினர்களை தவிர வெளி நபர்களையும், அந்த வெளி நபர்கள் அரசு சாரா நிறுவனங்களின் பிரதிநிதிகள், சமூக நல ஊழியர்களாகவும், கிராம மக்களின் வளர்ச்சிக்கு நல்ல ஆலோசனைகள் வழங்குபவர்களாகவும் இருத்தல் வேண்டும். கிராம ஊராட்சியின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஒன்று அல்லது அதிக குழுக்களில் பணி புரியலாம்.

ஆனால் நியமனக் குழு உறுப்பினர்கள், கிராம ஊராட்சியின் உறுப்பினர்களை கொண்டே இருத்தல் வேண்டும்.

**(3)** நியமனக் குழு தவிர பிற குழுக்களின் தலைவரை சம்பந்தப்பட்ட குழுக்களின் உறுப்பினர்களிலிருந்து தேர்வு செய்யப்பட வேண்டும். நலக் குழு, நல்வாழ்வு, தண்ணீர் மற்றம் சுகாதாரக் குழு, பொது விநியோக முறைக்குழு ஆகியவற்றிற்கான தலைவர் கிராம ஊராட்சியின் பெண் உறுப்பினர்களிலிருந்து தேர்வு செய்யப்பட வேண்டும். அத்தகைய உறுப்பினர்கள் மூன்று குழுக்களின் தலைவர் பதவிக்கு மேல் வகிக்கக் கூடாது.

### 4. நியமனக் குழு

நியமனக் குழுவில் கிராம ஊராட்சித் தலைவரும் ஆண்டு தோறும் கிராம ஊராட்சி உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கும் இரண்டு உறுப்பினர்களும் இருக்க வேண்டும். சட்டப் பிரிவு 101ல் குறிப்பிடப்பட்ட கிராம ஊராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் ஒவ்வொரு நபரையும் நியமனம் செய்வதற்கு சட்டத்தில் கண்ட ஏற்பாடுகளின் படி அல்லது அதன்படி இயற்றப்பட்ட விதிகளின்படி திட்ட வட்டமாக நீக்கப்பட்டுள்ள பதவிகள் தவிர, கிராம ஊராட்சியில் உள்ள எந்தப் பதவிகளுக்கான ஊதியம், கிராம ஊராட்சி நிதிகளுக்கு பற்றாக எழுதப்படத்தக்கதாயிருக்கிறதோ, அத்தகைய எல்லா பதவிகளுக்கும், நியமனக் குழுவின் மூலம் தேர்வு செய்யப்பட வேண்டும்.

# 4. COMMITTEES

### 5. நலக் குழு

நலக்குழுவானது, பெண்கள் நலம், குழந்தை நலம், உடல் ஊனமுற்றோர் ஆதரவற்றவர்கள், விதவைகள், வயதானோர், பிணைத் தொழிலாளர்கள், ஆதிதிராவிடர் மறறும் பழங்குடியினர் ஆகியோர்களது, நலப்பணிகள் குறிப்பாக **(1)**சுயஉதவிக் குழுக்கள் அமைத்தல். **(2)**சிறார் தொழிலாளர் முறை ஒழித்தல் **(3)**குடிப்பழக்கத்தை கட்டுப்படுத்துதல் **(4)**பெண் சிசுவதையினை தடுத்தல் **(5)**வரதட்சணை எதிர்ப்பை வளர்த்தல் **(6)**சமுதாய நல்லிணக்கத்தை வளர்த்தல் மற்றும் **(7)** தீண்டாமை பழக்கத்தை நீக்குதல் போன்றவற்றை கவனிக்கும்.

### 6. நல்வாழ்வு, தண்ணீர் (மற்றும்) சுகாதாரக் குழு

**(1)**நல்வாழ்வு, தண்ணீர் மறறும் சுகாதாரக் குழுவானது, சுகாதார வசதிக்கான சமுதாயச் சொத்துக்களை பராமரிததல், குடிநீர் வசதி மற்றும் சுகாதாரம், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதை கண்காணித்தல், கிராம ஊராட்சி வீதிகளில், தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பதை உறுதி செய்தல், அம்மை மற்றும் தடுப்பு ஊசிகள் போடுவதற்கான முகாம்களை ஏற்பாடு செய்தல், உடற்பாதுகாப்பை பேணி காப்பது குறித்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல், சுத்தமான குடிநீர், கிராம சுகாதாரம் போன்றவற்றை உறுதிப்படுத்துவதற்கான விழிப்புணர்ச்சி முகாம்கள் நடத்துதல் மற்றும் அதில் கலந்து கொள்ளும். இக்குழுவானது ஊராட்சிப் பகுதிகளில் உள்ள துணை மருந்தகங்கள் மற்றும் பொது மருந்தகங்கள் ஆகியவற்றை பார்வையிட்டு கிராம ஊராட்சியில் அது குறித்து விவாதிக்க ஆலோசனை மற்றும் அறிக்கையினை அளிக்கும். இக்குழுவானது குடிநீர் உபயோகிப்பாளர்களைக் கொண்டு குடிநீர் ஆதாரங்களை பராமரிப்பதற்கு ஊக்குவிக்கும், தனிப்பட்ட வீடுகளில் கழிப்பிடம், பொதுக் கழிப்பிடம் மற்றும் பள்ளிகள் மற்றும் சமுதாய அளவில் சுகாதார வசதிகள் மேம்பாடுக்கு இக்குழு உதவி செய்யும்.

### 7. பொது விநியோக முறைக் குழு

கிராம ஊராட்சியில் பொது விநியோக முறையில் வழங்கப்படும் உணவு பங்கீடு நியாயவிலைக் கடைகள் செயல்பாடுகள் குறித்து கிராம ஊராட்சி கண்காணிக்க இந்த பொது விநியோக குழு கிராம ஊராட்சிக்கு உதவும். குறிப்பிட்ட காலங்களில் தரமான பொருள்கள் விநியோகம் செய்வதை கண்காணித்தல், தினமும் கடையில் உள்ள பொருள்களின் இருப்பை வெளியிடுதல், விற்பனை பொருள்களின் விலைகள் தெரிவித்தல், உணவு பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்படும் பொருள்கள், பொது மக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளை இக்குழு கிராம ஊராட்சிக்கு தெரிவிக்கும்.

### 8. வேளாண்மை உற்பத்திக் குழு

வேளாண்மை உற்பத்திக் குழு, விவசாயம், தோட்டக்கலை, பட்டுப்புழு வளர்ப்பு, மலர் வளர்ப்பு, மீன் வளர்ப்பு, பால் அபிவிருத்தி, நீர் பிடிப்பு மற்றும் தரிசு நில மேம்பாடு, சமூக காடுகள் வளர்ப்பு, மண்வளப் பாதுகாப்பு தண்ணீர் மேலாண்மை போன்றவற்றில் திட்டங்கள் தயாரித்தல் மற்றும் செயல்படுத்துவதற்கு உதவும். இக்குழுவானது கிராமங்களில் விவசாயக் குழுக்களை ஏற்படுத்தி புதிய யுக்திகளை கையாளுவதற்கு ஏற்பாடு செய்யும்.

### 9. பணிகள் குழு

மத்திய மற்றும் மாநில அரசுகளால் நிறைவேற்றப்படும் திட்டங்களின் கீழ் பணிகளை நிறைவேற்றுவதற்கும், அதற்கான வழிமுறைகள் பொது மக்கள் அறியும் வகையில் செய்தலும், பிறதுறைகள் மற்றும் நிறுவனங்கள் மூலம் செயலாக்கப்படும் வேலைகளை கண்காணித்து தரமாகவும் மறறும் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கவும், பணிகள் குழு கிராம ஊராட்சிக்கு உதவும். உள்ளூர் தேவைகள் மற்றும் வள ஆதாரங்கள் அடிப்படையில் கிராம ஊராட்சிக்கான வளர்ச்சித் திட்டம் தயார் செய்வதற்கு இக்குழு கிராம ஊராட்சிக்கு உதவும்.

### 10. கல்விக் குழு

விதி **3** துணை விதி **(2)**ல் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கல்விக் குழுவானது கிராம ஊராட்சிகள், பொது மக்கள் மற்றும் பெற்றோர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதி ஆகியோர்களை உறுப்பினராகக் கொண்டிருக்கும். இக்குழு கிராம ஊராட்சிப் பகுதிகளில் செயல்படும் அனைத்து பள்ளிகளின் செயல்பாட்டை கண்காணிக்கும். பள்ளிக்கு தேவைப்படும் கட்டிடம் போன்ற கட்டுமான வசதிகளை பெருக்க மக்களின் பங்கேற்பை அதிகப்படுத்த திட்டம் தீட்ட இக்குழு உதவும். பொது மக்களிடையே கல்வி அறிவு மற்றும் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தும்.

**11. தற்காலிகக் குழுக்கள் ஏற்படுத்துதல்**

(1) விதி–3 துணை விதி (1)ல் குறிப்பிட்டவற்றைத் தவிர, கிராம ஊராட்சியானது குறிப்பிட்ட நோக்கத்திற்காக, அதிகாரத்தை செலுத்துவதற்கும், பணிகளை ஆற்றுவதற்கும், கடமைகளை செய்வதற்கும் (பாசனத்தை தவிர), அதனை இயற்றுவதற்காக மற்ற குழுக்களை கிராம ஊராட்சி ஏற்படுத்தலாம். மேலும் தேவை ஏற்படின் பொருள் தொடர்பாக பரிசீலனை செய்து அறிக்கை அல்லது ஆலோசனை வழங்குமாறு கோரியிருப்பின், அதன் பொருட்டு ஏதாவது குழு அமைக்கலாம். இந்தக் குழுக்களின் பதவிக் காலம் ஆறுமாத காலத்திற்கு மேற்படாது. ஆறுமாதத்திற்கு மேல் செயல்பட வேண்டுமென்ற தேவை ஏற்பட்டால், ஆய்வாளரின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

(2) துணை விதி (1)ன் கீழ் அமைக்கப்பட்டுள்ள அனைத்து குழுக்களுக்கும் தலைவர் அலுவல் சாரா உறுப்பினர் ஆவார்.

**12. பார்வையிடல்**

ஒவ்வொரு குழுவும் கிராம ஊராட்சிப் பகுதியில் உள்ள மையம், நிறுவனம் அல்லது நிலையம் பார்வையிடலாம். குழுவின் தலைவர், சம்பந்தப்பட்ட மையம், நிறுவனம் அல்லது நிலையத்தின் தலைவருக்கு மூன்று நாட்களுக்கு முன்பே பார்வையிடும் தேதி, நேரம் மற்றும் காரணத்தைக் குறிப்பிட்டு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**13.கூட்ட அறிவிப்பு மற்றும் நிகழ்ச்சி நிரல்**

குழுவின் தலைவர் கூட்டத் தேதி, நேரம் மற்றும் இடம் ஆகியவற்றை மூன்று தினங்களுக்கு முன்பாக முடிவு செய்து அதனை அனைத்து உறுப்பினர்களக்கும் தெரிவிக்க வேண்டும்.

**14. கூட்டம் நடத்துவதற்கான காலமுறை**

நியமனக் குழு தவிர மற்ற குழுக்கள் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை கூட்டப்பட வேண்டும். கிராம ஊராட்சிக்கு ஏதாவது பணியிடம் தேர்வு செய்யும் போது நியமனக் குழு கூட்டப்பட வேண்டும்.

**15. திட்டம் தயாரித்தல்**

ஒவ்வொரு குழுவும், சம்மந்தப்பட்ட துறை குறித்து ஆண்டு தோறும் மற்றும் தொலை நோக்கு வளர்ச்சித் திட்டம் தயார் செய்யும். ஒவ்வொரு குழுவின் தலைவர் அந்த திட்டத்தை கிராம ஊராட்சியின் முன் கலந்தாய்வு செய்து முடிவு எடுப்பதற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

**16.கிராம ஊராட்சி அனுமதித்தல்**

ஒவ்வொரு குழுவின் ஒவ்வொரு குறிப்புரை அல்லது ஆலோசனை அல்லது பரிந்துரையினை கிராம ஊராட்சிக் கூட்டத்தில் வைத்து அதன் மீது பரீசீலனை செய்து முடிவுகள் மேற்கொள்ள வேண்டும்.

**17.குழுக்களின் பரிந்துரைகளை கிராம சபைக் கூட்டத்தில் தெரிவித்தல்**

ஒவ்வொரு ஆண்டும் கிராம ஊராட்சி குழுவின் பரிந்துரைகளை தொகுத்து ஜனவரி முதல் மார்ச் மாதத்திலான காலாண்டில் நடைபெறும் கிராம சபைக் கூட்டத்தில் தெரிவிக்க வேண்டும்.

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்